RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s717

OPEN ACCESS

# கவிஞர் வீ.வே. முருகேச பாகவதரின் மதுவிலக்கு கீர்த்தனைகள் ஒரு சமூகவியல் பார்வை

**எ. பாவலன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வேல் டெக் ரங்கா சங்கு கலைக்கல்லூரி, ஆவடி, சென்னை-600062, தமிழ்நாடு, இந்தியா.

# Poet V.V. Murugesa Bhagavatar's Abstinence Anthem: A Sociological View

**E. Pavalan** [a, *]

[a] Department of Tamil, Vel Tech Ranga Sanku Arts College, Avadi, Chennai-600062, Tamil Nadu, India

* Corresponding Author: drpavalan@gmail.com

Received: 18-12-2021
Revised: 29-04-2022
Accepted: 13-05-2022
Published: 28-07-2022

Check for updates

**ABSTRACT**

Born in 1887, poet Murugesa Bhagavathar has been fascinated by his mother tongue Tamil since his earliest days and admired for his erudition. He is 14 years older than Bharatiyar. He is also a pioneer in the world of poetry. He is strong in writing conventional poetry. Even the illiterate laymen were accepted by his poetry. So he taught the old people of those days to write poetry when there was time left after family time. So countless people from areas including Willivakkam have come to him and learned poetry properly. Also, Murugesa Bhagavatar's poetry had a fan base in Dharavi, Mumbai. He was close to leaders like Gandhiji and Dr. Ambedkar. Realizing the poetry of Bhagavatar, Mr. V. Kalyana Sundaram and Scholars including C.N. Annadurai also went to Bhagavatar's residence and presented his books with greetings and praises. In poet Murugesa Bhagavatar's works the exaltation of the Tamil language and mother tongue can be widely seen. He has natural musical knowledge. So in his songs mostly rhythm and chantam are scattered in his poetry. Not only that, he saw the misery prevailing in the society at that time and against it caste liberation, women's liberation, social liberation, Indian liberation, nature, etc. are the subjects of his poetry. Similarly, in 1929, he campaigned against alcohol through his poetry at the request of the Congress party, Gandhiji. In that way, this article aims to reveal the history of alcohol prohibition through the poems he wrote.

**Keywords:** Murugesa Bhagavatar, Poet, Women's Liberation, Saste Liberation

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிதைக்கு எப்பொழுதும் ஒரு தனித்த அடையாளம் உண்டு. படைப்பாளிகளின் அகவய பட்ட உணர்வுகளை அத்துனை அழகாக பிரதிபலிக்கும் வடிவம் கவிதையாகும். சங்க காலம் தொடங்கி வைத்த மரபுசார் கவிதை வடிவம் பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டில் பெரியத் தாக்கத்தை உண்டாக்கியது. கவிதையின் வடிவம் மட்டுமல்லாது பாடுபொருளும் மாற்றம் காணத் தொடங்கியது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியார் தொடங்கிவைத்த கவிதை மரபு வேகம் எடுக்கத் தொடங்கியது. அதனால் பாரதியை முன்னிறுத்தி கவிதை மரபு உண்டானதை மறுக்க முடியாது.

## முன்னோடிக் கவிஞர்

பாரதி, பாரதிதாசன், தமிழ் ஒளி, கவிமணி தேசிய விநாயகம், வெ. ராமலிங்கம் உள்ளிட்ட மரபுக் கவிஞர்கள் தோன்றினர். அந்த வரிசையில் மகா மதுரகவி வீ. வே. முருகேச பாகவதரும் இடம் பெற

வேண்டியவர். அவர் இப் பூமிப்பந்தில் 1887 க்கும் 1974 க்கும் இடைப்பட்ட காலங்களில் எண்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்தவர். அவர் தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து தன் வாழ்நாட்களை அலங்கரித்தவர். இவரது தாய்மொழிப் பற்றை, "தமிழை மூச்சாகவும், பேச்சாகவும் வாழவேண்டும். அன்னிய மொழிகளைக் கட்டாயக் கல்வியாகத் திணிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு நம்முடைய எதிர்ப்பினை ஒட்டுமொத்தமாகத் தெரிவிக்க வேண்டும். இதில் சாதி, சமய, அரசியல் வேறுபாடுகள் காட்டக்கூடாது. அவ்வாறு ஒரு நிர்பந்தம் வரும்போது எதிர்த்துப் போராட வேண்டும்" என்ற கூற்றிலிருந்து அறியலாம் (Jeyabalan, 2014).

## தாய்மொழிப் பற்று

தமிழ் மொழியைத் தரணி எங்கும் கொண்டு சென்ற பெருமை அவருக்கு உண்டு. மதுரகவி வீ.வே. முருகேச பாகவதரின் கவிதைக்கு ஒரு ரசிகர் பட்டாளமே இருந்துள்ளது. அதனால் பம்பாய் மாகாணம் தாராவியில் கொண்டாடிய வரலாற்றை, வரலாற்று நெடுங்கணக்கில் கண்டுணர முடிகிறது. அந்த மன்றத்தின் மூலம் 1946, 1954, 1963 ஆகிய ஆண்டுகளில் அவருக்குப் பாராட்டு விழா ஒன்று நடத்தி பொற்கிழி அளித்து சந்தன மாலையுடன் பொன்னாடை தூயப் பட்டாலான பொன்னாடை ஒன்றை போர்த்தி மகிழ்ந்தனர்" (Jeyabalan, 2014). மகாத்மா காந்தி, தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், அறிஞர் அண்ணா, திரு. வி. கல்யாண சுந்தரம் உள்ளிட்ட தலைவர்களிடம் இலக்கியத்தின் வாயிலாக நெருக்கம் பாராட்டியவர். பாகவதரின் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதற்காக திரு.வி.க. அவர்கள் கவிஞரின் வீட்டுக்கே சென்று வாழ்த்துரை வழங்கியுள்ளார். அறிஞர் அண்ணாதுரை கவிஞரின் நூல்களுக்கு வாழ்த்துரை, அணிந்துரை தந்து பாராட்டியுள்ளார். மேலும் பல மேடைகளிலும் முருகேச பாகவதரையும், அவர் எழுதிய கவிதைகளையும் புகழ்ந்துள்ளார்.

பாகவதர் தமிழ் இலக்கணத்தில் ஆழங்கால் பட்டவர். அவர் எழுதிய அனைத்துக் கவிதைகளும் மரபிலக்கணத்திற்கு உட்பட்டு அமைந்துள்ளன. பல பாடல்களை மெட்டமைத்து சந்தத்திற்கு உட்பட்டும் எழுதியுள்ளார். பார்ப்பதற்கு மென்மையாகவும், பழகுவதற்கு எளிமையாகவும் செயலில் உறுதியாகவும், தாய்மொழிப் பற்றும் கொண்ட பாகவதர் எழுதிய நூல்களை இன்றைய தமிழ்நாடு அரசாங்கம் அரசுடைமை ஆக்கிய வரலாற்றில் இருந்து அவரின் செயல் திறனை அறிய முடிகிறது.

## சமூக சீர்திருத்தம்

முருகேச பாகவதர் அவர்கள் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் ஆதிதிராவிடர் சமூக சீர்திருத்த கீதங்கள், மதுவிலக்கு கீர்த்தனம், அறிவானந்த கீதம், தமிழ் சோலை ஆகிய இந்நூல்கள் பேராசிரியர் அவர்களால் வெளிக் கொணரப்பட்டது (Jeyabalan, 2014). அதன் பிறகு தான் தமிழ்நாடு அரசாங்கம் கடந்த 2021 இல் முருகேச பாகவதரின் கவிதைத் திறனை உணர்ந்து அவருடைய நூல்களை அரசுடைமை ஆக்கியது. கவிஞர் பாகவதர் இலக்கிய உணர்வும் சமுதாய நலனும் கொண்டு விளங்கியவர் அந்த வகையில் அவருடைய படைப்புகள் பெரும்பாலும் சமூகப் பிரச்சினையை முன்வைத்து எழுதிய படைப்புகள் அதிகம். அவற்றுள் மதுவிலக்கு கீர்த்தனம் எனும் தலைப்பில் அமைந்த நூலைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## மது விலக்கு

முதலில் இங்கு மது விலக்கு குறித்து விளக்கம் தேவைப்படுவதால் முதலில் மதுவிலக்குப் பற்றி பின்வருமாறு காணலாம். மதுவிலக்கு என்பது மது தயாரிப்பு, வினியோகம் மற்றும் விற்பனையைத் தடை செய்யும் சட்ட நடவடிக்கை ஆகும். உலக வரலாற்றில் பல்வேறு காலங்களில், பல நாடுகளில், பல தரப்பட்ட மதுவிலக்கு சட்டங்கள் அமலில் இருந்து வருகின்றன. இந்தியாவிலும் மதுவிலக்குப் போராட்டம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்தே தொடங்கிவிட்டது என்று கூற முடியும்.

தமிழ்ச் சமூகத்தில் மது குறித்தான பதிவுகள் இலக்கியத்தில் வாயிலாக பார்க்க முற்படும் பொழுது பல தகவல்கள் கிடைக்கின்றன. அந்த வகையில் சங்க இலக்கியத்தில் மதுவை மது, நறவு, கள், பெரிய கள், சிறிய கள், தேறல் இப்படி பல பெயர்களில் ஆளப்பட்டுள்ளன. சங்க கால அரசர்கள் பெரும்பாலும் கள்ளையும், மதுவையும் விரும்பி உண்ட வரலாற்றைக் கூறுகிறது. புறநானூறு 235ஆம் பாடலில் அதிகமான் தனக்கு கள் கொடுத்ததைப் பற்றி அவ்வையார் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

"சிறிய கள் பெறினே எமக்கு ஈயும் மன்னே!

பெரிய கள் பெறினே

யாம் பாட, தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே"

என்கிற பாடல் வரி மெய்ப்பிக்கிறது. அதேபோல் வேல்பாரி புகழ்ந்து பாடிய கபிலர், புறநானூற்றில் 113ஆம் பாடலில் மது குறித்து பதிவு செய்துள்ளார் (Puliyur Kesikan, 1977).

"மட்டு வாய் திறப்பதும், மை விடை வீழ்ப்பவும்,

அட்டு ஆன்று ஆனாக் கொழுந்துவகை ஊரன் சோறும்"

சங்க இலக்கியத்தில் 2381 பாடல் வரிகளில் மதுவையும், கள்ளையும் பற்றி பதிவுகள் விரவி வருவதைக் காண முடிகிறது (Jeyabalan, 2014). சங்க இலக்கியப் பாடல்களை அகம், புறம் என்று வகைப்படுத்தவியலும். அப்பாடல்கள் தமிழரின் வரலாற்றையும், பண்பாட்டையும், பொதுவுடமைச் சிந்தனையையும், தனி மனித ஒழுக்கத்தயும், தன்னுணர்ச்சியாகவும், பெண்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கும் வகையிலும், கடமையைச் செய்ய சொல்லி வலியுறுத்தியும், இயற்கையைப் போற்றிப் பாதுகாத்தும், உறவுகளைப் பேணுவது குறித்தும், உள்ளிட்ட யாவற்றையும் வலியுறுத்தும் விதமாக அமைந்துள்ளன. அதனால்தான் சங்க காலத்தைப் பொற்காலம் என்று கொண்டாட முடிகிறது.

சங்க காலத்திற்குப் பிறகு தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை நீதி இலக்கியங்கள் என்று கூற முடியும். அந்தக் காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், சங்க காலத்தில் உருவான அரசு முறையையும் அதற்கு தூண்டுதலாக அமைந்த மண்ணுக்கும், பெண்ணுக்கும் நடந்த போர் முறையைக் கண்டிக்கிறது.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்

நஞ்சுண்பார் கள்ளுண் பவர்"

இப்படி பல இடங்களில் வள்ளுவர் கண்டிக்கிறார் (Puliyur Kesikan, 2008). பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் ஆசிரியர்களும் கண்டிப்பதை வழி நெடுகிலும் காணமுடியும். அதன்பிறகு மிக அழுத்தமாக சித்தர்கள் மதுவையும் மாதுவையும் மிக வன்மையாக கண்டிக்கும் போக்கைக் காணமுடியும்.

தமிழ்ச் சமூகம் மதுவை விரும்புவதும், எதிர்ப்பதுமாக இருந்த சூழலில் ஐரோப்பியர் வருகைக்குப் பிறகு மதுவுக்கு நிரந்தரமாக ஒரு தீர்வு காண வேண்டிய சூழல் ஏற்பட்டது. அதன் பொருட்டு தான் மதுவிலக்கு என்கின்ற ஒரு கோரிக்கை ஓங்கி ஒலிக்கத் தொடங்கிற்று. மதுவை காரணம் காட்டி மக்களைச் சிந்திக்க விடாமல் தன்வசப்படுத்த நினைத்த எண்ணத்தை எதிர்க்கும் பொருட்டு 1930ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த இந்தியாவில் மதுவிலக்கு நடைமுறைப்படுத்த வேண்டி காந்தியடிகள் தலைமையில் போராட்டம் நடத்தப்பட்டது. சாராயம் மற்றும் கள்ளுக்கடை மறியல் போராட்டங்களில் விளைவாக அன்றைய சென்னை மாகாணத்தில் மட்டும் 9000 சாராயக்கடைகளை ஏலம் எடுக்க ஆளின்றி ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட கடைகள் மூடப்பட்டன. தந்தை பெரியார், சேலம் தாதம்பட்டியில் தம்முடைய தோட்டத்தில் இருந்த 500 தென்னை மரங்களை குலைகளை வெட்டி சாய்த்தார்.

இதற்கிடையில் தான் முருகேச பாகவதரை 1929ஆம் ஆண்டு அன்றைய காங்கிரஸ் அரசாங்கம் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ய நியமித்தது. அதன் அடிப்படையில்தான் மதுவிலக்கு பிரச்சாரத்தை மிகத் தீவிரமாக செயல்படுத்தத் தொடங்கினார். அந்த வகையில் 1932ஆம் ஆண்டு "மது விலக்கு கீர்த்தனம்" எனும் நூலை எழுதி தமிழ்ச் சமூகத்தில் மிகப்பெரிய கவன ஈர்ப்பு பெற்றார்.

அந்நூலில் மதுவிலக்கு கீர்த்தனம், குடிவெறி நீக்கும் கொச்சகம், விஷத்தை குடிக்கலாமா, குடிகாரன் புலம்பல், மது நீக்கு சொர்ணம்பா மாலை எனும் தலைப்பில் மிகச் சிறந்த கவிதைகளைப் படைத்துள்ளார். இவை அனைத்தையும் கீர்த்தனைப் பாடல்களாக எழுதியுள்ளார். அடிப்படையில் இசை அறிவும் பெற்று இருப்பதால் அவருக்கு இந்தப் பாடல்கள் எழுதுவதில் மிக இயல்பாக கை கொல்லப்பட்டார்.

மதுபானம் எப்பொழுதுமே மனிதனுக்கு எதிரானது. அது போதையைத் தரும் மயக்கத்தை ஏற்படுத்தும் சிந்திக்கும் அறிவை நிறுத்தும் சிறு மூளையைப் பாதிக்கும் கல்லீரலுக்கு தீங்கு ஏற்படும் சுவாச கோளாறு மூச்சுத் திணறல் எப்படி உடலுக்கு தீங்கு ஏற்படுத்தும் வல்லமை கொண்டது. அதேபோன்று சமுதாயத்தில் மானம் மரியாதை ஒழுக்கம் எல்லாவற்றையும் கெடுத்து நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும். இப்படிப்பட்ட மது குடிப்பவர்களை சமூகம் பழிக்கிறது, வெறுக்கிறது. உடல் நலம், மன நலம் கெட்டு சமுதாயத்தில் புறம் தள்ளப்பட்டு பிறந்ததற்கான அர்த்தம் இன்றி மிகச் சொற்பமான நாட்களிலேயே உயிர் இழக்கும் அபாயம் உருவானது.. இந்த அடிப்படைத் தகவல் எல்லோருக்கும் தெரியும். ஆனால் முருகேச பாகவதர் ஒவ்வொரு கவிதைக்குள்ளும் ஊடுருவிச் சென்று ஒவ்வொரு உறுப்புகள் ஒவ்வொரு சிந்தனை ஒவ்வொரு உணர்வு இவை எல்லாம் எப்படி பாதிக்கப்படுகிறது என்பதை ஒவ்வொரு கவிதையாக வரிசைப் படுத்துகிறார். விருத்தப் பாவில் எழுதிய கவிதை பின்வருமாறு,

"நிந்தனைக்கு ஆளாகும் பார்வைமாறும்

நிகரில்லா மூளைதனை நாசமாக்கும்

இந்திரியங் கல்லீரல் இருதயத்தை

இரைப்பை யினைதான் கெடுக்கும் ஈடில்லாத

புந்தியழித்திடும் நெஞ்சும் குடலும் சும்மா

பொறுக்காமல் தானெரியும் புலம்பச்செய்யு

மந்தியினைப் போலாடி யலைந்து வீணே

மதுபானந் தனைருந்தி மயங்காதீரே"

குடிப்பதனால் ஒவ்வொரு உறுப்பும் பாதிக்கப்படும் என்பதை தெளிவாக காட்சிப்படுத்துகிறார் (Jeyabalan, 2014). குடித்த பிறகு உடல் சோர்வடைகிறது. அதனால் ஏற்படும் தீங்கையும் பற்றி குடிவெறி நீக்கும் கொச்சகம எனும் தலைப்பில் அமைந்த ஒரு கவிதையில் பின்வருமாறு கூறுகிறார்.

"நோக்காது கண்ணிருந்தும் நுவலாது நல்வார்த்தை

கேட்காது காதிருந்தம் கெடுமதியால் நல்வினையே

பார்க்காது தன்மதிப்பை பகுத்தறியாப் பெருந்தீங்கே

ஆக்குமந்த மது குடியை அடியோடே ஒழிப்பீரே"

இந்தக் கவிதை முழுவதும் குடி வெறியால் ஏற்படும் தாக்கம், சமுதாயத்தில் மிக மோசமானச் சூழலுக்கு கொண்டு போய்ச் சேர்த்து விடும். சோதனையின் பிறப்பிடம், சோகத்தின் இருப்பிடம், வேதனையின் உறைவிடம், வேசித்தனம் ஊடுருவும். இப்படி எல்லாம் மது மயக்கத்தால் ஏற்படுகிறது. அதனால் குடியை ஒழித்தாக வேண்டும் என்கிறார். மேலும், இந்தக் கவிதையில் குடிக்கு பதிலாக எவற்றையெல்லாம் உட்கொள்ளலாம் என்றும் அதனால் உடலுக்கு நன்மை கிட்டும் என்பதையும் வரையறை செய்கிறார். அந்த வகையில் நீர் மோர், நெய், பால், தயிர், இளநீர் இவற்றை எடுத்துக் கொண்டால் உடலுக்கு ஆரோக்கியம் தருவதை என்கிறார் (Jeyabalan, 2014).

"கள்ளு சாராயம் கஞ்சா விலக்கு -இதை

கண்டறிந்து உன் மதியைத் துலக்கு"

கள்ளு, சாராயத்துடன் கஞ்சாவும் மனிதனை அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று கண்டிக்கிறார் (Jeyabalan, 2014).

"பன்றியும் நாயும் தொடாதபாழானக் கள் குடித்து

நன்றி இழப்ப தேண்டி சொர்ணமே

நாசம் விலைக்குமடி ஞானச்சொர்ணமே"

என்று மது நீக்கு சொர்ணம்பா மாலை என்ற கவிதையில் மிக வன்மையாக கண்டிக்கிறார் (Jeyabalan, 2014).

## முடிவுரை

அர்த்தமுடைய வாழ்க்கையை மது அர்த்தமற்றதாக மாற்றும். மனிதர்களே விலங்கை விட மோசமானவர்கள் என்று கவிஞர் வீ. வே. முருகேச பாகவதர் குறிப்பிடுகிறார். அரசாங்கம் கூட குடி குடியைக் கெடுக்கும் உயிரைக் கொள்ளும் என்ற வாசகத்தோடு மதுவை விற்பனை செய்கிறது. மது விலக்கு கொண்டு வந்து நாட்டு மக்களை நல்வழிப்படுத்தி முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில சிறந்த முறையில் கவிதைகளில் வெளிக் கொணர்ந்து உள்ளார். காலத்தின் சூழலுக்கு ஏற்ப இந்தக் கவிதையும் இன்றைய தேவையாகும். வீ.வே. முருகேச பாகவதர் தன் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவும், தமிழ் சமூகத்திற்காகவும், சமூக மறுமலர்ச்சிக்கும் பாடுபட்டவர். பாரதி, பாரதிதாசன், கவிமணி என்ற வரிசையில் முருகேச பாகவதரும் கவனம் பெற்றிருக்க வேண்டும். திட்டமிட்டு முருகேச பாகவதர் உட்பட அயோத்திதாச பண்டிதர், தமிழ் ஒளி உள்ளிட்ட எண்ணற்ற படைப்பாளிகளை மறைத்துள்ளனர். இதற்கான காரணம் எதுவாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் காலம் சரியாக அறிந்து வைத்திருக்கிறது. எதையெல்லாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் எவற்றை எல்லாம் புறம் தள்ள வேண்டுமென்று. காரல் மார்க்ஸ் சொல்வதைப் போன்று மாற்றம் என்ற ஒரு சொல்லைத் தவிர மீதி அனைத்தையும் மாற்றத்திற்கு உட்படுத்த வேண்டும் என்பார். வரலாறு மாறிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இன்றைய அரசாங்கம் வீ.வே. முருகேச பாகவதர் எழுதிய நூல்களை அரசுடைமை ஆக்கியது இருந்து புலப்படுகிறது.

## References

Jeyabalan, K.P., (2014) Maha Madurai Kavinar V.V. Murugesa Bhagavathar Padaippukal, Nilasuriyan Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan, (2008) Thirukkural Thelivurai, Paari Nilayam, Chennai, India.

Puliyur kesigan, (1977) Purananuru, Pari Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License